2013 ஏப்ரல் 26]

கழகங்களுக்கு, டீசல் விலை உயர்வால் ஏற்பட்ட அந்த நிதிச் சுமையினைச் சமாளிக்கும் பொருட்டு 500 கோடி ரூபாய் அளவிற்கு நிதியினை வழங்கிட ஆணையிட்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்திலே அறிவிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தேர்தல் வாக்குறுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆய்வில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 333, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

333—

வீட்டுமனைப் பட்டா

***19494—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, பெரியார் நகர், நேரு நகர் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி கிராமம், பெரியார் நகர், நேரு நகர்ப் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்கு உண்டான புல எண் 123/1–ல் வகைப்பாடு 'வேளச்சேரி ஏரி' என நில ஆவணங்களில் உள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கோரிக்கையின்பேரில் நில உரிமை மாற்ற கருத்துரு மாவட்ட ஆட்சியருடைய

பரிசீலனையில் உள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியரிடமிருந்து நில உரிமை மாற்ற முன்மொழிவுகள் வரப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று ஏழைகளின் வாழ்வில் விளக்கேற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேளச்சேரி தொகுதிக்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். அறிவிக்காமலேயே மலிவு விலை உணவகம் தொடங்கி, ஏழைகளின் வயிற்றில் எரியும் பசித் தீயை அணைத்த அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, நேரு நகர், கக்கன் நகர், பெரியார் நகர், சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடித்தட்டு மக்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்களுக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு நிர்ணயித்த முழு தொகையும் கட்டி முடிக்கப்பட்டு, கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது; ஆனால், 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் பட்டா வழங்கப்படவில்லை. அதேபோன்று, தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்தகால பொற்கால ஆட்சிக் காலத்தில், 1991–1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சுமார் 1,295 மனைகள் 6 பிரிவுகளின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மனைகளுக்கு அரசு நிர்ணயித்த முழுத் தொகையும் கட்டி முடிக்கப்பட்டு, கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

2013 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விதான் கேட்கிறேன். ஆனால், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள வேளச்சேரி கிராமம், பெரியார் நகர், நேரு நகர் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீட்டுமனைகளுக்குண்டான, புல எண் 123/1–ல், வகைப்பாடு வேளச்சேரி ஏரி என நில அளவைகளில் பதிவாகியுள்ளது. மேற்காணும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலத்தில், அரசாணை பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, நத்தம் புறம்போக்கு நிலமாக இருந்தால், நேரடியாக பட்டா மாற்றம் செய்து, உடனடியாக பட்டா வழங்க முடியும். பிற இடங்களில் பட்டா மாறுதல் கேட்கின்றபோது, அதை வகைப்பாடு செய்துதான் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கோரிக்கையின்பேரில், நில உரிமை மாற்றக் கருத்துரு, சென்னை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டவுடன், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேல்நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 26

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த அரசு ஏழைகளுக்கு ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அரசாணையை நீட்டித்து உத்தரவிட்டது. ஆனால், நீட்டிக்கப்பட்ட உத்தரவில், அது மூன்று நாட்களுக்குள்ளேயே காலாவதியாகிறமாதிரி குறிப்பிட்ட காரணத்தினால், அந்த உத்தரவு தற்போது காலாவதியாகிவிட்டது. எனவே, மீண்டும் ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான அரசாணையை நீட்டித்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "சிறப்பு வரன்முறைத் திட்டத்தினுடைய, ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை செய்யும் அரசாணை கால நீட்டிப்புச் செய்து கொடுக்கப்படுமா?" என்று வினா எழுப்பியுள்ளார்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இது எடுத்துச்செல்லப்பட்டு இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக விரைவில் அந்த அரசாணையை பிறப்பிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 334, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு*